**கூடுதல் சார்பு நீதிமன்றம், பொன்னேரி**
**அசல் வழக்கு எண். 148/2021**
**நாள் 24/01/2025 வெள்ளிக்கிழமை**

இந்நீதிமன்ற எழுத்தரால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பின் 1–வது சாட்சியின் வாக்குமூலம் 1878ம் ஆண்டில் 10–வது சட்டத்தின் வரைமுறைகளுக்கு உட்பட்டு பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| பெயர் – ராஜா | த/பெயர் – முனுசாமி |
| வயது – 50 | தொழில் – |
| விலாசம் – எண் 74, கிருஷ்ணன் தெரு, வளசரவாக்கம், சென்னை – 87. | |

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி–**

எழுமலையும் கைலாசமும் ஜுன் 2011 வரை வட்டி பணம் கொடுத்தார்கள் என்றும் 2018 மார்ச் மாதம் கைலாசத்திடம் வட்டி பணம் கொடுக்க சென்ற போது அசலை கொடுத்துவிட்டு ஆவணம் பெற்றுச்செல்லுமாறு கூறினார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. கைலாசம் அவரது மனைவி வசந்தா பெயருக்கு வா.த.சா ஆ 4 பொது அதிகார பத்திரத்தை வைத்து கிரைய பத்திரம் செய்து வைத்தார் என்றால் சரிதான். வசந்தா பிரியா என்பவருக்கு சொத்தை கிரையம் செய்து கொடுத்தார் என்றால் சரிதான். முனுசாமிக்கும் ஏழுமலைக்கும் பணத்தை செட்டில் செய்தார்களா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. முனுசாமியும் ஏழுமலையும் பணத்தை செட்டில் செய்யவில்லை என்று வசந்தா, கைலாசம் மற்றும் பிரியா என்பவர்களுக்கு நோட்டீஸ் அனுப்பிய விவரம் தெரியுமா என்றால் தற்போது தான் அனுப்பினார்கள். அதற்கு எனது மனைவி பிரியா பதில் கொடுத்தாரா என்றால் இல்லை. எனது மனைவிக்கு உடல் நிலை சரியில்லாததால் அவர் சாட்சியம் அளிக்க

வரவில்லை. அவர் எனக்கு பொது அதிகாரம் கொடுத்துள்ளார் அதை நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்யவில்லை. வசந்தா பிரியாவிற்கு கிரையம் செய்யவேண்டிய தேவை என்னவென்று கேட்டால் அவர் கிரையம் கொடுக்க தயாராக இருந்தார் நாங்கள் கிரையம் வாங்கினோம். பிரியா நல்ல உடல் நலத்துடன் தான் உள்ளார் என்றும் நீதிமன்றத்திற்கு வந்து சாட்சியம் அளித்தால் உண்மை தெரிந்துவிடும் என்பதால் தான் அவர் சாட்சியம் அளிக்க வரவில்லை என்றால் சரியல்ல. வந்தா கைலாசம் என்பவரின் வளவர்ப்பு மகன் என்பதாலும் பிரியா எனது மனைவி என்பதாலும் நாங்கள்அனைவரும் சேர்ந்து பொது அதிகார பத்திரம் மற்றும் இரண்டு கிரைய பத்திரங்களை மோசடியாக ஏற்ப்படுத்தியுள்ளோம் என்றால் சரியல்ல. வசந்தா மற்றும் கைலாசம் முனுசாமி மற்றும் ஏழுமலையை ஏமாற்றி மோசடி செய்து சொத்தை பொது அதிகார பத்திரம் மற்றும் கிரைய பத்திரங்கள் ஏற்ப்படுத்தியது சட்டபடி செல்லதக்கதல்ல என்றால் சரியல்ல. வா.த.சா ஆ 5 மற்றும் வா.த.சா ஆ 7 கிரைய ஆவணங்களுக்கான மறுபயன் செலுத்தப்பட்டதற்கான வங்கி பரிமாற்றங்கள் மற்றும் ரசீது தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வா.த.சா ஆ 5 மற்றும் வா.த.சா ஆ 7 கிரைய ஆவணங்களுக்கு மறுபயன்கள் கொடுக்கப்படவில்லை என்றும் சுவாதீனம் ஒப்படைக்கப்படவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தில் வில்லங்கம் ஏற்ப்படுத்துவதற்காக நாங்கள் அனைவரும் சேர்ந்து வா.த.சா ஆ 4,5,7 ஆவணங்களை தயார் செய்தோம் என்றால் சரியல்ல. மேற்படி ஆவணங்களின் அடிப்படையில் எனது மனைவி பிரியாவிற்கு தாவா சொத்தில் எந்தவித உாிமையும் ஏற்ப்படவில்லை என்றால் சரியல்ல. மேற்படி ஆவணங்களின் அடிப்படையில் நாங்கள் கோரியுள்ள பரிகாரம் கிடைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. ஏழுமலை, முனுசாமி, கைலாசம்

ஆகியோர் உறவினர் என்பதால் அடமானம் தான் வைத்துள்ளோம் என்று என்னி இதுநாள் வரை ஏழுமலை முனுசாமி வில்லங்கம் போட்டு பாா்க்கவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்திற்கு வில்லங்க சான்று தாக்கல் செய்துள்ளேன். நான் கூறுவது தவறு என்றும் வில்லங்க சான்றிதழ் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. ஏழுமலை முனுசாமி வில்லங்கம் போட்டு பாா்க்கவில்லை என்பதால் தான் நாங்கள் வா.த.சா ஆ 4,5,7 ஆவணங்களை மோசடியாக ஏற்ப்படுத்தியுள்ளோம் என்றால் சரியல்ல. வா.த.சா ஆ 5 மற்றும் வா.த.சா ஆ 7 கிரைய ஆவணங்கள் செல்லாது என்று ஏழுமலை மற்றும் முனுசாமி வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியதற்கு எனது மனைவி பதில் அறிவிப்பு அனுப்பினாரா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. கைலாசம் மற்றும் வசந்தா பதில் அறிவிப்பு கொடுத்துள்ளனர். கைலாசம் கூறியதன் அடிப்படையில் மேற்படி விவரம் எனக்கு தெரியும். கைலாசம், வந்தா மற்றும் எனது மனைவி பதில் அறிவிப்பு அனுப்பியதை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தெரியவில்லை. மேற்படி அறிவிப்பில் பொது அதிகார பத்திரத்திற்கு முன்பாகவே கிரைய ஒப்பந்தம் செய்ததாக கைலாசம் வசந்தா அனுப்பிய பதில் அறிவிப்புல் கூறப்பட்டுள்ள விவரம் எனக்கு தெரியாது. பொது அதிகார பத்திரத்திற்கு முன்பு கிரைய ஒப்பந்தம் ஏற்ப்படுததியதாக பொய் கூறுகிறோம் என்றால் சரியல்ல. ஏழுமலை, முனுசாமி வா.த.சா ஆ 7 பட்டாவை ரத்து செய்ய கோரி வருவாய் துறையில் மனு கொடுத்துள்ளனர் என்றும் அதில் எனக்கு அறிவிப்பு வந்ததா என்றால் அறிவிப்பு எதுவும் வரவில்லை. ஏப்ரல் 2019 க்கு முன்பே கிரையம் பெற்றதால் அடிமனை வாடகை உயர்த்தி கொடுக்கவேண்டும் என்று கேட்க இயலாது என்றால் சரியல்ல. ரூபாய் 5000/– ஏப்ரல் 2019

முதல் ஜூன் 2021 வரை மாதம் இழப்பீடு கொடுக்கவேண்டும் என்று வழக்கறிஞர் அறிவிப்பில் கூறியுள்ளேன். அவ்வாறு இழப்பீடு கோர எனக்கு உரிமையில்லை என்றால் சரியல்ல. மேற்படி பரிகாரம் தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல. வா.த.சா ஆ 9 புகாரின் கீழ் கவரப்பேட்டை காவல் நிலையத்தில் பிரதிவாதியை அழைத்து விசாரித்தனர் அவர்கள் 2 மாதத்தில் காலி செய்து கொடுப்பதாக கூறிச்சென்றனர். 2 மாதம் கழித்து பிரதிவாதி காலி செய்யததால் காவல் நிலையத்தில் நான் மீண்டும் புகார் செய்த போது உரிமையியல் வழக்கு என்பதால் நீதிமன்றத்தில் தீர்த்துக்கொள்ளுமாறு கூறினார்கள். நாங்கள் பிரதிவாதிக்கு வா.த.சா ஆ 10 அறிவிப்பு அனுப்பினோம் அதற்கு பிரதிவாதி பதில் அறிவிப்பு அனுப்பியுள்ளார். அதில் பிரதிவாதி அனைத்து விவரங்களையும் கூறியுள்ளபோதிலும் நாங்கள் சட்டவிரோதமாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. வழக்கு சொத்து விவரத்தில் தாவா சொத்தில் இயற்கை அமைப்புகளை பொருட்டு குறிப்பிட்டு கூறவில்லை என்றால் தற்போது வரை இரும்பு சீட்டு அமைத்து தார்பாய் மட்டும் தான் உள்ளது. அதனை சுற்றி கட்டுமான சுவர் உள்ளது. தாவா சொத்தில் அமைந்துள்ள கட்டுமானங்கள் மின் இணைப்பு ஆகியவற்றிற்கு நீதிமன்ற கட்டனம் கணக்கிட்டு செலுத்தவில்லை என்றால் சரியல்ல. நீதிமன்ற கட்டனம் முறையாக செலுத்ததாதால் வழக்கு நிலைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. தாவா சொத்தின் உரிமையாளர்களான ஏழுமலை மற்றும் முனுசாமியை தரப்பினராக சேர்க்கப்படவில்லை என்றால் அவர்கள் உரிமையாளர்கள் அல்ல நாங்கள் தான் உரிமையாளர்கள். எனக்கு முன்பு மேற்படி சொத்தின் உரிமையாளர் வசந்தா ஆவர். முனுசாமி ஏழுமலையிடம் பிரதிவாதி வாடகை ஒப்பந்தம்

ஏற்ப்படுத்தி வாடகைக்கு இருந்துவரும் நிலையில் அவர்களை தரப்பினராக சேர்க்காதகாரணத்தினால் இந்த வழக்கு பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிர்கா இழப்பீடு மாதம் ரூபாய் 1000/– கோரியுள்ளது சட்டவிரோதமானது என்றும் அதற்கு நீதிமன்ற கட்டணம் செலுத்தப்படவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதி 2021க்கு முன்பு 10 வருட காலமாக ஏழுமலை முனுசாமியிடம் அடிமனை வாடகை ஒப்பந்தம் ஏற்ப்படுத்தி வாடகைக்கு இருந்துவந்தார் என்றும் 14.07.2021 தேதி மீண்டும் அவர்களிடம் அடிமனை வாடகை ஒப்பந்தம் ஏற்ப்படுத்தி வாடகைக்கு இருந்து வருகிறார் என்றால் சரிதான். பிரதிவாதி எனது மனைவியிடமோ, கைலாசம் மற்றும் வசந்தாவிடமோ அடிமனை வாடகை ஒப்பந்தம் எதுவும் ஏற்ப்படுத்திக்கொள்ளவில்லை. ஆனால் பிரதிவாதி 2 மாத காலத்திற்குள் காலி செய்து கொடுப்பதாக ஒப்புக்கொண்டார். ஆனால் பிரதிவாதி எந்த வித எழுத்து மூலமான உறுதிமொழியும் எழுதி கொடுக்கவில்லை என்றால் சரிதான். பிரதிவாதி எங்களிடம் அது போல் எந்த வித உறுதிமொழியும் அளிக்கவில்லை என்றாலும் பொய் கூறி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளதால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யதக்கது என்றால் சரயில்ல.

**மறுவிசாரணை இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்ன சங்கதிகள் அனைத்தும் அவர் கூறியவாறே என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டு கையொப்பம் / கைரேகை பெறப்பட்டது.

**கூடுதல் சார்பு நீதிபதி**
**பொன்னேரி**